கனம் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருமங்கலம்.
முன்னிலை : திரு. E.மணிகண்டன், B.A., B.L.,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி(முகூபொ),
திருமங்கலம்.

2026ம் வருடம் ஜனவரி மாதம் 20ம் தேதி செவ்வாய்கிழமை
இடைநிலை மனு எண்.5/2026
மற்றும்
இடைநிலை மனு எண்.6/2026
இன்
அசல் வழக்கு எண்.243/2008
* * * *

1. சிங்கராஜ்
2. கெளதம் ... மனுதாரர்கள்/1,12 பிரதிவாதிகள்

/எதிர்/

1. போஸ் ... 1ம் எதிர்மனுதாரர்/வாதி
2. ராமாத்தாள்
3. கண்ணம்மாள்
4. முத்தம்மாள்
5. சின்னதாயி
6. பால்பாண்டி
7. பாப்பா
8. துரைப்பாண்டி
9. ராமர்
10. ஜெயமணி
11. அசோதை ... 2 முதல் 11 எதிர்மனுதாரர்கள்/
2 முதல் 11 பிரதிவாதிகள்

இம்மனுக்களில் மனுதாரர்கள்/1, 12 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.G.சங்கர்கணேஷ் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.S.சீனிவாசன் அவர்கள் ஆஜராகியும், 11ம் எதிர்மனுதாரர்/11ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.இராமமூர்த்தி அவர்கள் ஆஜராகியும், 2 முதல் 10 எதிர்மனுதாரர்கள்/2 முதல் 10 வரையிலான பிரதிவாதிகள் அசல் வழக்கில் ஒருதலைபட்சமாக்கப்பட்டும் இருந்து வந்த மனுக்களில், இருதரப்பு வாதுரைக்கு போதிய வாய்ப்பளித்தும், மனு மற்றும் சாட்சிய சான்றாவணங்களைப் பரிசீலனை செய்து இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் முன் பரிசீலனையின் கீழ் இருந்து வந்த இந்த இரண்டு மனுக்களில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

## பொதுவான உத்தரவு

மனுதாரர்கள்/1, 12 பிரதிவாதிகள் தரப்பில் CPC பிரிவு 151ன் கீழ் அசல் வழக்கில் மனுதாரர்கள்/1, 12 பிரதிவாதிகள் தரப்பில் முடிக்கப்பட்ட சாட்சி விசாரணையை மீண்டும் re-open செய்யவும், மனுதாரர்கள்/1,12 பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.1ஐ மீண்டும் recall செய்யவேண்டி

கட்டளை 18 விதி 17 மற்றும் 151 CPCன் கீழ் இந்த இரண்டு மனுக்களானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>1. தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை</u> :–

இந்நிர் மனுதாரர்கள்/1, 12 பிரதிவாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுக்களானது சட்டப்படி நிலைக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

1.1) மனுதாரர்கள்/1, 12 பிரதிவாதிகள் தரப்பில் CPC பிரிவு 151ன் கீழ் அசல் வழக்கில் மனுதாரர்கள்/1, 12 பிரதிவாதிகள் தரப்பில் முடிக்கப்பட்ட சாட்சி விசாரணையை மீண்டும் re–open செய்யவும், மனுதாரர்கள்/1,12 பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.1ஐ மீண்டும் recall செய்யவேண்டி கட்டளை 18 விதி 17 மற்றும் 151 CPCன் கீழ் இந்த இம்மனுக்களானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1.2) வா.சா.1ஐ, பிரதிவாதிகள் தரப்பில் மீண்டும் குறுக்கு விசாரணை செய்யவேண்டி கடந்த 11.11.2025, 19.11.2025, 24.11.2025, 26.11.2025, 10.12.2025, 08.01.2026 மற்றும் 20.01.2026 ஆகிய தேதிகளில் வா.சா.1 இந்நீதிமன்றத்தில் ஆஜராகியபோதும் பிரதிவாதிகள்

தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை என்றும், அதனால் எதிர்மனுதாரர்கள்/வாதியின் வாய்மொழியான ஆட்சேபனையை ஏற்று இம்மனுக்களை தள்ளுபடி செய்யவேண்டும் என்று 1ம் எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் எடுத்துரைக்கப்பட்டது. எனவே, 1ம் எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் எழுத்துபூர்வமான ஆட்சேபனை எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

**3) தீர்வு**

இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலினை செய்யப்பட்டது. இருதரப்பிலும் இம்மனுக்களை நிரூபணம் செய்யும்பொருட்டு சாட்சி, சான்றாவணங்கள் எதுவும் முன்னிலைப்படுத்தவில்லை.

3.1) இம்மனுக்களானது வா.சா.1ஐ மனுதாரர்கள்/1,12 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்வதற்காக Reopen மனுவும், வா.சா.1ஐ Recall செய்யவேண்டியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3.2) அசல் வழக்கு கடந்த 2008ம் ஆண்டு முதல் நிலுவையில் இருந்து வருகிறது. இந்நிலையில், கடந்த 15.09.2008ம் தேதியன்று

எழுவினா வனையப்பட்டு, வா.சா.1 ஆனவர் கடந்த 06.11.2025ல் விசாரணை செய்யப்பட்டு சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில், வா.சா.1ஐ, மனுதாரர்கள்/1, 12 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்வதற்காக கடந்த 11.11.2025, 19.11.2025, 24.11.2025 மற்றும் 26.11.2025 ஆகிய தேதிகளில் வாய்தா ஏற்பட்டுள்ளது. எனினும் மேற்படி வாய்தா தேதிகளில் வா.சா.1ஐ மனுதாரர்கள்/1, 12 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை என்ற காரணத்தால் வா.சா.1ன் குறுக்கு விசாரணையானது இந்நீதிமன்றத்தால் 26.11.2025ம் தேதியன்று முடித்து வைக்கப்பட்டது.

3.3) எனினும், 20.01.2026ம் தேதியன்று பிரதிவாதிகளுக்கு மீண்டும் வா.சா.1ஐ குறுக்கு விசாரணை செய்ய ஒரு வாய்ப்பு அளிக்கும்விதமாக 20.01.2026ம் தேதியன்று வா.சா.1 இந்நீதிமன்றத்தில் ஆஜரான நிலையில் வா.சா.1ஐ குறுக்கு விசாரணை செய்ய இந்நீதிமன்றத்தால் அனுமதி வழங்கப்பட்டது. எனினும், மனுதாரர்கள்/1, 12பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.1ஐ குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை. இந்நீதிமன்றத்தில் வா.சா.1 ஆஜரான நிலையில் மேற்படி வா.சா.1ஐ குறுக்கு விசாரணை செய்ய முன்வராத மேற்படியான

பிரதிவாதிகளின் நடவடிக்கையானது அசல் வழக்கினை காலம் கடத்தும் விதமாகவே உள்ளது.

3.4) மேலும், அசல் வழக்கானது கடந்த 2008ம் ஆண்டு முதல் நிலுவையில் இருந்து வருகிறது. இந்நிலையில், வா.சா.1ஐ குறுக்கு விசாரணை செய்ய இந்நீதிமன்றத்தால் பல வாய்ப்புகள் பிரதிவாதிகளுக்கு அளித்தும், மனுதாரர்கள்/1, 12பிரதிவாதிகள் தரப்பில் அசல் வழக்கினை காலம் கடத்தும் விதமாகவே இந்த இரண்டு இடைநிலை மனுக்களானது இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று 1ம் எதிர்மனுதாரர்/வாதி மற்றும் 2ம் எதிர்மனுதாரர்/2ம் பிரதிவாதி தரப்பில் வாய்மொழியாக தெரிவிக்கப்பட்டது.

3.5) எனவே, மேற்படியான 1ம் எதிர்மனுதாரர்/வாதி மற்றும் 2ம் எதிர்மனுதாரர்/2ம் பிரதிவாதி தரப்பு வாய்மொழியான வாதத்தினை கருத்தில்கொண்டும், மனுதாரர்கள்/1,12 பிரதிவாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த இரண்டு இடைநிலை மனுக்களும் வா.சா.1ஐ குறுக்கு விசாரணை செய்ய போதிய வாய்ப்பளித்துள்ள நிலையில் சட்டப்படியானதாக இல்லாத நிலையினை கருத்தில்கொண்டும், அசல்

வழக்கானது கடந்த 2008 முதல் நிலுவையில் உள்ளதை கருத்தில்கொண்டும் மனுதாரர்கள்/1,12 பிரதிவாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த இரண்டு இடைநிலை மனுக்களை நிராகரிப்பது சட்டப்படியானது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

**முடிவாக,** மனுதாரர்கள்/1,12 பிரதிவாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுக்களானது நிராகரித்து இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, பின்னர் இன்று 20.01.2026ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ESWARAN MANIKANDAN
Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.01.20 17:35:12 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி(முகூபொ),
திருமங்கலம்.

__இணைப்பு__:-

__இருதரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:__ இல்லை

ESWARAN MANIKANDAN
Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.01.20 17:35:29 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி(முகூபொ),
திருமங்கலம்.

இடைநிலை மனு எண்.5/2026
மற்றும்
இடைநிலை மனு எண்.6/2026
இன்
அசல் வழக்கு எண்.243/2008
பொது வரைவு/செவ்வை உத்தரவு
நாள்: 20.01.2026.